# தெரிவுக்குழுவின் முயற்சி தோல்வியென மங்களமுனசிங்க நாடாளுமன்றில் அறிவிப்பு!


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 84 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 3 இதழ் 311
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18 — 12 — 1992


(கொழும்பு) இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் நோக்குடன் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு பிரச்சினையை தீர்க்கும் வகையில் அரசியல் ரீதியாக ஒன்று

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுதலைவர் சபாநாயகருக்கு கடிதம்

(கொழும்பு) வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு தனித்தனி மாகாண சபை அமைக்க வேண்டுமென்று தெரிவுக்குழுவிலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் இணங்கிய போதிலும், ஆறு தமிழ் அரசியல் கட்சிகளும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணங்கவில்லை என தெரிவுக்குழுவின் தலை

(4-ம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகள் மீள்பரிசிலனை நடவடிக்கை

(கொழும்பு) இலங்கை அரசு தனது நிதி நிலைமையில் வளர்ச்சியைக் காட்டத் தவறினால் இலங்கைக்கு உதவி வழங்குவதை

4-ம் பக்கம் பார்க்க)

# அரசியல் தலைமை இல்லாததால் படை நடவடிக்கை பாதிப்பு!

## - அத்தாவுட செனிவரத்தின பேட்டி -

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படையினர் மத்தியில் சரியான அரசியல் தலைமைத்துவம் இல்லாத காரணத்தினாலேயே வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டு ஒரு பாதிப்புநிலை உருவாகியிருப்பதாக நவசமசமாஜக் கட்சியைச்சேர்ந்த திரு. அத்தாவுட செனவிரத்ன சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சர், பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர்கள், உயரதிகாரிகள் மற்றும் படை அதிகாரிகள் கலந்துகொள்ளும் பாதுகாப்புச்சபை கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டார்.

இது படையினருக்கு அப்போது நல்லதொரு தெம்பைக் கொடுத்தது. தம்மை வழி நடத்த ஒரு அரசியல் தலைவர் இருந்தார் என்ற உணர்வைக் கொடுத்தது.

படையினருக்கு ஒரு அரசியல் தலைமைத்துவத்தை இது கொடுத்தது. இதனால் படையினர் உத்வேகத்துடன்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொட்டகல செல்லமுடியாது பட்டதாரிகள் யாழ் திரும்பினர்

(திருநெல்வேலி) கொட்டகலையில் நடைபெறவுள்ள ஒருவார காலப் பயிற்சியில் கலந்துகொள்ள வடபகுதியிலிருந்து சென்ற பட்டதாரிகள் பலர் கிளாலி வரை சென்று ஏமாற்றத்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆயிரக்கணக்கான பயணிகள் ஆலங்கேணியில் தவிப்பு

(யாழ்ப்பாணம்) கொழும்பிலிருந்து வந்து ஆலங்கேணி, முரசுமோட்டை, பூநகரிப் பகுதியில் ஆயிரக்கணக்கான பிரயாணிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர் இடமாற்ற பட்டியல் வந்தது

(மானிப்பாய்) வடக்கு-கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் லிகிதர்

4ம் பக்கம் பார்க்க)

## போலிஅடையாள அட்டை தயாரித்த தமிழர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையில் போலி அடையாள அட்டை தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட வெள்ளவத்தை தபால் நிலைய தமிழ் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து இரு இயந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இவர் கைது செய்யப்பட்டதை அடுத்துபுறக்கோட்டை, நித்தம்புவ பகுதிகளில் மேலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களுக்கு வவுனியாவில் மூடுவிழா

(வவுனியா)

வவுனியாவிலுள்ள அகதி முகாம்கள் அடுத்தவருட ஜனவரியில் மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள அனைத்து அகதி முகாம்களும் மூடப்பட்டு இந்தமுகாம்களிலுள்ளவர்களை வவுனியா ஆசிக்குளம் முகாமில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

வவுனியாவில் இடம்பெயர்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

கரவெட்டி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி: காலை 8 மணி முதல் 10.30 மணி வரை. நெல்லியடி ம. ம. வி.: காலை 11 மணிமுதல் 1 மணிவரை. பருத்தித்துறை - வட இந்து மகளிர் கல்லூரி பி. ப. 2 மணி முதல் 5 மணி வரை. (சி)

## தொடரும் யுத்தத்தினால் இலங்கை பொருளாதாரம் பெரும் மோசமடைகிறது

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தினாலும் அதிகரித்துவரும் பெரும் தொகையான இராணுவ செலவு காரணமாகவும் அதன் பொருளாதாரம் மோசமான அளவிற்கு பலவீனமடைந்துள்ளன.

ஐக்கிய அமெரிக்க பொருளாதார ஆய்வு நிறுவனமான 'அக்ஸ்போர்ட் அனலிடிக்கல்' இவ்வாறு கருத்துவெளியிட்டுள்ளது.

இரண்டாயிரம்ஆண்டளவில் இலங்கை ஒரு புதிய கைத்தொழில் நாடாகும் சாத்தியம் தொடர்பாக இந்த ஆய்வு நிறுவனம் தயாரித்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விமான நடமாட்டம் அதிகரிப்பு

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை விமானங்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தடுப்புக்காவலிலுள்ள தமிழர் விபரம் திரட்டு

(கொழும்பு)

நாட்டின் பலபகுதிகளிலும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மற்றும் காணாமல்போன தமிழர்களின் பெயர் மற்றும் விபரங்களை மனித உரிமைகள் பணியகக்குழு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1988 முதல் 1992 வரை மகசீன் சிறைச்சாலையிலும் 1990 ம் ஆண்டுமுதல் 1992 ம் வரை களுத்துறை சிறைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## ராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை நாடாளுமன்றில் விவாதம்

(புதுடில்லி)

நரசிம்மராவ் தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக பாரத ஜனதாக் கட்சித் தலைவர் அடேல் பிகாரி வாஜபாய் கொண்டுவந்தநம்பிக்கை இல்லா தீர்மானம் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**பாகற்காய் குளிகை**

சலரோக நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய Karawilla Capsules, கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7053)

**PITAWAKKA PLUS**

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7065)

**வைத்தியம்**

செங்கண்மாரி, குடற்புண், தொய்வ, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள். மூத்திரரோகங்களில் பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர்கி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7035)

**விற்பனைக்கு**

உங்கள் வியாபாரம் விருத்தியடைய கண்ணைக்கவரும் பல வர்ணக்கலர்களில் கலண்டர்களில் விலாசம் பதிப்பித்துப் பெற்றுக்கொள்ள எம்மைக்கலந்தாலோசியுங்கள். ஸ்ரீ லங்கா அச்சகம் (அச்சக வீதி) 234A. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (எ-2668)


# 22 தமிழ் இளைஞர்கள் பதுளையில் கைது

(கொழும்பு)

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 22 தமிழ் இளைஞர்கள் கொழும்பு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிக்க பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பதுளை மாவட்ட எம். பி. தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசரகால நீடிப்பு பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க

# களனி பல்கலைக்கழகத்துக்கு மொழியியல் ஆய்வு கூடம்

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்துக்கு சகல வசதிகளைக் கொண்ட மொழியியல் ஆய்வு கூடம் ஒன்றை ஜப்பான் அன்பளிப்புச்செய்துள்ளது.

இந்த ஆய்வு கூடத்தில் கதிரியல், செவிப்புல நவீன சாதனங்கள் பெருமளவில் பொருத்தப்பட்டுள்ளன.

ஒரே நேரத்தில் 35 மாணவர்கள் இந்த ஆய்வுக்கூடத்தில் மொழியியல் ஆய்வுகளை நடாத்தமுடியுமென்றும் கூறப்படுகின்றது.

சுமார் 50 லட்சம் ரூபாபெறுமதியான இந்த ஆய்வுக்கூடம் இலங்கையிலேயே மிகப்பெரிய ஆய்வுக்கூடம் என்றும் கூறப்படுகின்றது. (ன)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24-ம் திகதி வியாழக்கிழமை நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெறும். (154)

0 0

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை கிழக்கு சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலையில் சங்கத் தலைவர் திரு. இ விஜயகுமார் தலைமையில் நடைபெறும். (154)

0 0

(கொழும்பு)

அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலுள்ள "ஸ்ரீ கோத்தா" மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (72)

0 0

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

# முஸ்லிம் தீவிரவாதிகள் மீது இஸ்ரேல் பிரதமர் ஆவேசம்

(டெல்லவிவ்)

இஸ்ரேலிய படைவீரர் ஒருவரை கடத்திச் சென்று கொலை செய்த முஸ்லிம் கொரில்லாக்கள் மீது பழிவாங்கப் போவதாக இஸ்ரேலியப் பிரதமர் இரிஷாத் றபின் கூறியுள்ளார்.

தாம் மேற்கொள்ள இருக்கும் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளையிட்டு உலக நாடுகள் ஆச்சரியப்படக்கூடாது என்று இஸ்ரேலியப் பிரதமர் சூளுரைத்துள்ளார்.

ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் ஹமாஸ் இயக்கத்தின் தலைவரை விடுதலை செய்யும்படி கோரியே மேற்படி இஸ்ரேலிய வீரரை இந்த தீவிரவாத இயக்கத்தினர் கடத்திச் சென்று கொலை செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# கூட்டுறவு ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் சில தனியார் நிறுவனங்களில் வழங்கப்படும் ஓய்வூதியம் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு குழுவிடம் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கூட்டுறவுத் துறைஊழியர்களுக்கு காப்புறுதித் திட்டம் வழங்கும் நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதிலும் இருந்து 40 ஆயிரம் கூட்டுறவு ஊழியர் வரையில் ஓய்வூதியத் திட்டம் மூலம் பயனடையவுள்ளனர். (க)

# அமரர் குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டிகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், அமரர் குமரையா ஞாபகார்த்த 2-வது வருடாந்த உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியை இன்று முதல் நடாத்தவுள்ளது.

யாழ் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 12விளையாட்டுக்கழகங்களிடையே நடாத்தப்படும் மேற்படி போட்டியின் முதலாட்டம் இன்று யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் ஸ்டவக்கிங்ஸ் கழகத்தை எதிர்த்து யுத்கார்மல் கழகம் மோதும்.

இதேநேரம் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறுமென இச்சங்கத்தின் காரியதரிசி திரு. அ. தேவராசா தெரிவித்துள்ளார்.

## ரயில் விபத்தில் 20 பேர் பலி

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தில் நேற்று நடந்த ரயில்-பஸ் விபத்து ஒன்றில் 20பேர் இறந்துள்ளனர். 40பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தவேளை மதுரைக்கருகில் பஸ் லொறி விபத்தொன்றிலும் 6 பேர் மரணமாகியும் 50 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (சு)

## பொதுசன உதவிப் பணம்

(மானிப்பாய்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வருபவர்களுக்கான ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பகுதி கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)

## சம்பளம் கிடைக்கவில்லை

(கொழும்புத்துறை)

யாழ். மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு மூன்று மாதமாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் இன்றுவரை வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது (154)

## இராசி பலன்

18-12-1992

(தமிழுக்கு மார்கழி 03)

வெள்ளிக்கிழமை

நவமி ந. ப. 12-24 வரை, அத்தம் பி. ப. 4-54 வரை, அமிர்தயோகம், இராகுகாலம் காலை 10-53 முதல் 12-23வரை சுபநேரம் காலை 6-23 முதல் 7-53 வரை.

மேடம்: தொழில் சிறப்பு. நன்மதிப்பு, குடும்ப மகிழ்ச்சி,

இடபம்: நடைக்கஷ்டம், வீண் பழிகேட்டல், அலைச்சல்.

மிதுனம்: பந்துக்கவ்கவலை, தேவையற்ற செலவு, காரியத்தடை.

கடகம்: பொதுசன மதிப்பு, புதியநட்பு, சயனசௌக்கியம்.

சிங்கம்: குடும்ப மனஸ்தாபம், அகால போஜனம், இடைஞ்சல்.

கன்னி: நன்முயற்சி, பணியாள் சகாயம் இல்லச்சிறப்பு

துலாம்: பிறருக்கு கட்டுப்படல், ரோகபயம், வேலைப்பழு.

விருச்சிகம்: நண்பருதவி, புதியமுயற்சி பொதுப்பணி.

தனுசு: அன்னியர் சகாயம், வாக்குவன்மை, தற்பெருமை

மகரம்: பயணக்கஷ்டம், மனைவியால் துயர், மனச்சஞ்சலம்.

கும்பம்: இனசனவிரோதம், ரோகபீடை, வீண்பயம்.

மீனம்: பணலாபம், பெரியோர்மதிப்பு, வாக்குவசீகரம்.

— ஜோஸ்யர்

## ஈராண்டுகள் போனதெங்கே உன்நினைவோ போகவில்லை



**அப்பாப்பிள்ளை துஷ்யந்தகுமார் (சின்னக்கண்ணு)**

ஜனனம்: 1984-0?-02

மரணம்: 1991 01-09

தங்கத்தின் திருவுருவே
கண்ணு நீ சென்று விட்டாய்
மங்காத உன் நினைவால்
ஈராண்டுகள் ஆனதையா
எங்கேதான் எம்மை விட்டு
சென்றாயோ நாமறியோம்
அங்கமெல்லாம் அனலிடையின்
மெழுகாக மாறுதையா.
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் நினைவால் துயருறும்:

அம்மா, அப்பா, அக்காமார், அண்ணன்மார், அண்ணிமார், அன்ரிமார், மாமன்மார், அத்தைமார், பேரன், பேத்தி.

செ. அப்பாப்பிள்ளை,
82/3, பருத்தித்துறை வீதி,
3-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-7078)


**விக்னு கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**

பிரிவு 1, 2
EVENING CLASSES
(3 00 — 6 00)

பிரிவு — 1
SAT & SUN CLASSES
(8 00 — 3 00)

ஆண்டு - 10, 9, 8, 7, 6
வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

ஆண்டு - 1993ற்குரிய
**DAY CLASSES**
(8-00 — 2-00)
(பகல் நேர வகுப்புக்கள்)
பிரிவு - 1

ஆரம்பம்: 05-01-1993

★ விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன (ஏ-2692)

# இலங்கைத் தமிழர் 'பொருளாதார அகதிகளாக' ஐரோப்பிய நாடுகளில் கணிக்கப்படுகிறார்கள்

## அகதிகள் அதிகரிப்பால் பல நாடுகள் சீற்றம்

(பொன்)

ஐரோப்பிய நாடுகள் இலங்கைத் தமிழர்களை அகதிகளாக தங்கள், தங்கள் நாடுகளினுள் அனுமதித்தது கண்டிக்கவேண்டிய விடயமென ஐரோப்பிய நாடாளுமன்றின் அங்கம்வகிக்கும் ஜெர்மன் ஷோசலிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஊன்ர லுற்கி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இலங்கைத் தமிழர்களை அரசியல் அகதிகள் எனக் கூறுவதிலும் பார்க்க பொருளாதார அகதிகள் என்றே கூறவேண்டும்.

அகதிகளுக்கு ஜெர்மனி ஒரு சொர்க்க பூமி. அதற்கேற்ப ஜெர்மனியின் அரசியலமைப்பு உள்ளது. அகதிகளுக்கு வீட்டு வசதி, பணவசதியையும் அளிக்கிறது.

ஜெர்மனியில் பல ஆயிரக்கணக்கான இலங்கைத்தமிழர்கள் அகதிகளாக உள்ளனர். அவர்களின் தொகை எவ்வளவு எனகூறமுடியவில்லை இணைந்த ஜெர்மனி தற்போது அகதிகளால் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது.

முன்னாள் கிழக்குஜெர்மனும் இணைந்துள்ளதால் அவர்களும் பொருளாதார நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். வேலையற்றோர் தொகை 20 வீதத்தால் அதிகரித்துள்ளது. இதனால் 'நாஸி' இயக்கங்கள் தோன்றியுள்ளதுடன் வெளிநாட்டு அகதிகள் மீதான தாக்குதல்களிலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அண்மையில் வெளிநாட்டு அகதி ஒருவர் இங்கு கொலை செய்யப்பட்டது தொடர்பாக ஜெர்மன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜெர்மனியிலுள்ள இலங்கை அகதிகள் அதிக விரும்பத்தகாதவர்களாக கணிக்கப்படுகிறார்கள் இங்குள்ள இலங்கையர்கள் பலர் போதைவஸ்துக் கடத்தலிலும் கீழ்த்தரமான வேலைகளிலும் மற்றும் ஜெர்மன் சமுதாயத்தை மிரட்டும் சக்திகளாகவும் உள்ளனர்.

இந்த விடயங்களை ஏனைய ஐரோப்பியநாடுகளும் கவனத்தில் கொள்ளவேண்டுமெனவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஐரோப்பிய நாடாளுமன்ற தகவல் தொடர்பு இயக்குநர் திரு கைடோ நெற்ஸ் நடாத்தியஆசிய, ஆஸ்திரேலிய, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கான மாநாட்டில் டென்மார்க்கைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவர் கூறுகையில், தங்கள் நாடு இலங்கை அதிகளுக்கு புகலிடம் அளித்ததன்மூலம் தவறு செய்துவிட்டதாகக் கூறினார்.

இதேவேளை பொதுநலவாய நாட்டு பத்திரிகையாளர் சங்க இயக்குனர் திரு ரொபின் மக்கிசான் கூறுகையில், பிரிட்டனில் குவிந்துள்ள பெருமளவு இலங்கை அகதிகள் வருத்தத்திற்குரிய பல சம்பவங்களை சந்தித்துள்ளதாகக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் மிக மோசமான மனிதஉரிமை மீறல்கள் இடம் பெறுவதாகவும், பத்திரிகையாளர்கள்மீதும் பயங்கரவாதம் பிரயோகிக்கப்படுவதாகவும் தகவல் தொடர்பு சாதனங்கள் பெருமளவில் அரசினால் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அப்போது அங்கிருந்த இலங்கைப் பத்திரிகையாளர் ஒருவர் இலங்கை இனப் பிரச்னை பற்றிக் கூறினார். இலங்கை மக்கள் தமது நாட்டிலிருந்து பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள நாடுகளில் வாழ்வது கடினம் எனவும், குறிப்பிட்ட தொகையைக் கொண்ட ஒரு பிரிவுப் போராளிகளே ஒரு தனி நாட்டிற்காக யுத்தத்தைத் தொடர விரும்புவதாகவும் கூறினார்.

உடனே அங்கிருந்த பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவர் அப்படியானால் இலங்கையின் வடக்கு-கிழக்கில் மக்கள் மீது ஏன் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுகிறது எனவும் இலங்கைப் படையினர் ஏன் தமிழ் மக்களுக்கு எதிராக மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் எனவும் கேள்வி எழுப்பினார்.

வடக்கு-கிழக்கில் காணாமல் போகும் தமிழர்களின் பெயர் விபரங்களையும் அவர்கள் மீதான வன்முறைகள் பற்றிய விபரங்களையும் தரமுடியுமா எனவும் வடக்கு-கிழக்கில் படையினர் பலரும் காணாமற் போவதாகவும் அந்த இலங்கைப் பத்திரிகையாளர் இதற்குப் பதிலளித்தார்.

அதற்குப் பதிலளித்த பிரிட்டிஷ் பத்திரிகையாளர் இவ்வாறான சம்பவங்களுக்கு ஆயிரக்கணக்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அதனை சர்வதேச மன்னிப்புச் சபையிடம் பெறுமாறும் கூறினார்.

இலங்கையில் புலிப் போராளி என சந்தேகிக்கப்படும் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டால் ஏன் அவர் சித்திரவதை செய்யப்படுகிறார்? அவரை ஏன் மரியாதையாக விசாரிக்கக்கூடாது? பிரிட்டனில் இவ்வாறு நடந்து கொள்வதில்லை என்றும் ஒரு ஐரிஷ் பிரஜை குண்டு வெடிப்பு தொடர்பாக படையினரிடம் பிடிபட்டு அவர் ஐ. ஆர். ஏ. கெரில்லா எனச் சந்தேகிக்கப்பட்டால் அவரை பிரிட்டிஷ்படை மரியாதையாக நடத்தும்.

நாங்கள் மூன்றாம்தரமான விசாரணைகளை அவர்கள்மீது மேற்கொள்வதில்லை. சிறைக்கைதிக்குக் கொடுக்க வேண்டிய சகல உரிமைகளையும் கொடுத்து அவர்களை விசாரிப்போம். அவரது பதிலுக்கு தகுந்த முக்கியத்துவம் கொடுப்போம் எனவும் கூறினார். (கி)

## மன்னாரில் ஐவர் படையினரால் கைது

(மன்னார்)

மன்னாரில் ஐந்து தமிழ்ப் பொதுமக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதில் இரு பெண்களும், 3 ஆண்களும் அடங்குவர்.

மாந்தை இராணுவ முகாமிலிருந்து கவசவாகனங்கள் மற்றும் ஹெலிகொப்டரின் பாதுகாப்புடன் தேடுதல்வேட்டையை மேற்கொண்ட இராணுவத்தினரே இந்த ஐந்து பேரையும் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## இந்தோனேஷியாவில் பூமி அதிர்ச்சி 2000 பேர் பலி

(ஜாகர்த்தா)

இந்தோனேஷியாவில் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த பூமியதிர்ச்சியினால் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்துள்ளதுடன், 40 ஆயிரம் மக்கள் அகதிகளாகியுள்ளார்கள்.

பூமி அதிர்ச்சியினால் பல வீடுகள் நிலத்தில் புதையுண்டதுடன் வீதிகளில் சென்ற வாகனங்களும் நிலத்துக்கடியில் புதையுண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணிகளுக்கு அயல் நாடுகளின் உதவிகளை இந்தோனேஷிய அரசு கோரியுள்ளதுடன், ஐரோப்பிய நாடுகளிலிருந்து நிவாரணப் பொருட்கள் செல்வதாகவும் இவற்றின் பெறுமதி 3 லட்சத்து 12 ஆயிரம் டொலர்கள் என்றும் கூறப்படுகிறது. (வி)

## அடுத்த வருட முற்பகுதியில் யுத்த விமானங்கள் வரும்

(கொழும்பு)

இலங்கை விமானப் படையினதும், கடற்படையினதும் பலத்தைப் பெருமளவில் அதிகரிக்க பாதுகாப்பு அமைச்சு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக விமானப் படைக்கு அரசு ஆர்ஜன்ரீனாவிலிருந்து கொள்வனவு செய்துள்ள நான்கு 'புக்காரா' ரக குண்டு வீச்சு விமானங்களும் ரஷ்யா தயாரிப்பான ஐந்து "எம். ஐ. 8 ரக யுத்த ஹெலிகொப்டர்களும் அடுத்த வருட முற்பகுதியில் இலங்கை வரவுள்ளன.

இதேவேளை இவ்வருட இறுதிக்குள் அல்லது அடுத்தவருட முற்பகுதியில் கடற்படைக்கு பிரான்சுடன் இலங்கை கப்பல் கட்டும் நிறுவனம் இணைந்து தயாரித்துவரும் 4 பாரிய யுத்தக் கப்பல்களும், இரு போக்குவரத்துக் கப்பல்களும் கிடைக்கவுள்ளன.

இவை கிடைத்தபின் வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் ஒரு மாற்றம் ஏற்படுமெனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. எனினும் கடந்த 5 மாதகாலத்தில் வடக்கு-கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஏதும் இடம்பெறாததால் புலிகள் தங்கள் பலத்தை நன்கு அதிகரித்திருக்கக் கூடுமென பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

இதற்கிடையில் அரசு வடக்குக் கிழக்கை விட தெற்கில் தனது நிலையைப் பலப்படுத்தி எதிர்வரும் தேர்தலை சந்திப்பதிலேயே முனைந்து வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (சி)

## 'மரண நகரத்தினுள்' படையினர் பிரவேசம்

(லண்டன்)

சோமாலியாவில் பட்டினிக் கொடுமையால் 'மரண நகரம்' என அழைக்கப்படும் பைதபா நகருக்குள் நேற்று முன்தினம் முதன்முறையாக அமெரிக்க, ஜெர்மன், மற்றும் பிரெஞ்சு இராணுவத்தினர் நுழைந்து உணவுப்பொட்டலங்களை விநியோகித்தனராம்.

இராணுவத்தினரின் இச்செய்கையை பைதபா நகர அகதிகள் பெரும் மகிழ்ச்சிஆரவாரம் செய்து வரவேற்றனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் நடவடிக்கை இதுவென அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் வர்ணித்துள்ளார். (க)

## நலன்புரிச்சங்கம் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களின் நலன்புரிச் சங்கம் மாவட்ட அதிகாரி எஸ். பத்மநாதன் தலைமையில் அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (72)

## திருவிளக்கு பூசை

(புலோலி)

கரணவாய் தெற்கு உச்சில் அம்மன் கோவிலில் பிரதி பௌர்ணமி தோறும் திருவிளக்குப்பூசை நடைபெறவுள்ளது. (61)

## இன்று

(கொழும்புத்துறை)

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அதிபர் தலைமையில் இன்று 18-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (154

★

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கோட்டங்களில் கடமை புரியும் சகல பாடங்களுக்குமான ஆசிரிய ஆலோசகர்களுடைய முக்கியமான சந்திப்பு ஒன்று இன்று 18ம் திகதி யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. (109)

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சி. கூ. சங்க சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள் யாவரும் தவறாது கலந்து கொள்ளுமாறும் பொதுச்சபைக்கான அதிகாரக் கடிதத்தைப் பிராந்திய உதவிச் செயலாளர்களிடம் பெற்றுக் கூட்டத்திற்குச் சமுகமளிக்கும்போது சமர்ப்பிக்கும்படியும் கேட்கப்படுகின்றனர்.

## விடுதலைப் புலிகளுடன் அரசு எவ்வித பேச்சும் நடத்தவில்லை

### பத்திரிகைச் செய்திகளுக்கும் மறுப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ நேரடியாகவோ மறைமுகமாகவோ பேச்சுவார்த்தை எதுவும் இடம்பெறவில்லை என அரசு தரப்பு பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

அண்மைக்காலமாக பேச்சுவார்த்தை தொடர்பாக வரும் செய்திகளையும் அவர் மறுத்துள்ளார்.

மேலும் வடக்கு - கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை எதுவும் இடம்பெறுதிருப்பதால் இவ்வாறான பல செய்திகளை பத்திரிகைகள் ஆதாரமற்றவிதத்தில் பிரசுரித்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நோக்கம் நிறைவேறும் வரை புலிகளுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ பேச்சுக்களை நடாத்துவதற்கான சாத்தியம் எதுவுமில்லை எனவும் அந்த அதிகாரி கூறினார்.

இதற்கிடையில் அரசுதரப்பிலும், எதிர்த்தரப்பிலுமிருந்து இப்பிரச்னைக்கு உடனடித்தீர்வு காண, அரசு சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வற்புறுத்தி வருவதை மறுப்பதற்கில்லை என மற்றொரு அதிகாரி கூறியுள்ளார். (இ)

# ஆயுத உற்பத்தி செலவில் 2.5 வீதத்தைமீதப்படுத்தினல் உலகசிறுவரைபராமரிக்கலாம்

## - ஐ. நா. அறிவிப்பு

(லண்டன்)

உலகில் ஆயுத உற்பத்திக்காக செலவிடப்படும் தொகையில் 2 5சத வீதத்தை மீதப்படுத்தினல் உலகிலுள்ள சிறுவர்களின் நலன்களைப் பராமரிக்க முடியும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தொகை வருடமொன்றுக்கு 2500 அமெரிக்க டொலர்களுக்கு சமமானதாக இருக்கும்.

உலகிலுள்ள சிறுவர்களின் கல்வி, சுகாதார மற்றும் நலன்களைக் கவனிப்பதற்கு இந்த 2500 கோடி டொலர்களைப் பயன்படுத்தமுடியும்.

தினமும் உலகில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பசி, பட்டினி, நோய்நொடிகளால் பாதிக்கப்படுவதுடன் யுத்தம், வன்முறைகள் காரணமாகவும் பாதிக்கப்படுகின்றனர்

தினமும் 35 ஆயிரம் சிறுவர்கள் நோய்களினுல் மடிகிருர்கள். இந்த நோய்களைத் தடுத்து அவர்களைக்காப்பாற்ற இந்தப் பணத்தைப் பயன்படுத்தமுடியும்.

உலகிலுள்ள அனைத்து சிறுவர்களுக்கும் உணவு, உடை சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகளை வருடம் ஒன்றுக்கு வழங்குவதற்கு 2500 கோடி அமெரிக்க டொலர்கள் செலவாகும் என ஐ. நா. மேலும் தெரிவித்துள்ளது.

## கேம்பிரிட்ஜில் தமிழ் பரீட்சை

(லண்டன்)

லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் க: பொ. த. தமிழ் பரீட்சை இரண்டாவது தடவையாக அண்மையில் நடாத்தப்பட்டது.


அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இம்முறை மேற்படி பரீட்சைக்கு தோற்றியதாகக் கூறப்படுகிறது.


## மலிவு விற்பனை

நத்தார் - புதுவருட பண்டிகை நாட்களை முன்னிட்டு
1 - 12 - 92 முதல் 31 - 12 - 92 வரை
எமது நிலையத்தில் சகலவிதமான புடவை
வகைகளையும் தைத்த ஆடை வகைகளையும்
**மலிவு விலையில் விசேட கழிவுடன்**
பெற்றுக்கொள்ளலாம்.
வாடிக்கையாளர் நன்மைகருதி 19-12-92,20-12 92
விற்பனை நிலையம் திறந்திருக்கும்.

**லேடன் புடவை நிலையம்**
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-2636)


## முதலாவது ஆண்டு சிரார்த்த நினைவு



**அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்**
(பேப்பர் மணியம்)

தோற்றம்: 18 07-1920 மறைவு: 25-11-1991
ஆண்டுத்திதி: 18-12-1992

ஆண்டொன்று சென்றாலும் ஐயா உங்கள் நினைவலைகள்
மாண்டுதான் போய்விடுமோ மண்ணுலகில்எம்மைவிட்டு
அகிலத்தில் கண்கண்ட தெய்வம் எங்கள் ஐயாவே
பாசத்தின் இருப்பிடமே பண்பதனின் பிறப்பிடமே
நீர்காட்டிய பாதையிலே சீராக நடக்கின்றோம்
வையத்தின் விளக்கதுபோல் வாழ்ந்த எங்கள் உத்தமரே
வானத்தில் ஒளிர்கின்ற தாரகையாய் விளங்கிடுவீர்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புமிக்க மனைவி, பாசமுள்ள பிள்ளைகள்.
பற்றுமிக்க மருமக்கள்,
நேசம் நிறைந்த பேரமக்கள்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.
(சி-7079)

### அகதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீது நெலுக்குளம், பெரிய உலுக்குளம், மகாபச்சைக் கொடி ஆகிய கிராமங்களில் தங்கியிருந்த அகதிகளும் இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டு தற்போது தாண்டிக்குளம், வேப்பங்குளம், செட்டிகுளம் பகுதிகளில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகளும் ஆசிக்குளம் முகாமிற்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்

தற்போதுஇம்முகாமில் 300 குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. (வீ)

### உதவி வழங்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீள் பரிசிலனை செய்ய வேண்டி வரும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது,

நிதி நிலையில் வளர்ச்சி ஏற்படாவிட்டால் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு சாதகமான கருத்து பிரதிபலிப்பை இது பாதிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வீ)

### தெரிவுக்குழு

(1-ம் பக் த்தொடர்ச்சி)

வர் மங்கள முனசிங்க நாடாளுமன்ற சபாநாயகர் எம். எச். முகம்மதுக்கு அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றைக் காணபதற்காக குழு சகல வழிகளையும் ஆராய்ந்தது.

வடக்கு- கிழக்கில் இரண்டு தனித் தனி மாகாணங்களாகக் கருதி இரண்டு சபைகளை அமைப்பதற்கும், நிர்வாகத்தில் இந்தியாவில் உள்ளதைப் போல அதிகாரப்பரவலாக்கலைக் கொண்டுவருவதற்கும் குழுவில் அங்கம்வகித்த ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், லங்கா சமசமாசக் கட்சி என்பன இணங்கியுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட அங்கத்தவர் கே. ஸ்ரீநிவாசன் [ஈ. என். டி. எல். எவ்.] மட்டக்களப்பு மாவட்ட அங்கத்தவர் பஷீர் சேகுதாவுத் (ஈரோஸ்) ஆகியோர் இந்தத் தீர்மானங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி வடக்கு கிழக்கு தனித் தனி மாகாணங்களாக இயங்க வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஆனல் ஆறுதமிழ் அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்துவம் செய்த இரண்டு அங்கத்தவர்களும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளும் மற்றைய கட்சிகளினல் எடுக்கப்பட்ட இந்த முடிவுக்கு இணங்கவில்லை.

தெரிவுக்குழு இந்த முடிவுகளை உள்ளடக்கிய அறிக்கையை அடுத்த மாதத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. நாடாளுமன்றத்தினல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய தெரிவுக்குழு தமது முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளும் என்று மங்கள முனசிங்க சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-சு)

### ஆயிரக்கணக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வந்துசேரமுடியாத நிலையில் பெரும் கஷ்டத்திற்கு மத்தியில் தவித்து நிற்கின்றனர்.

ஒருவாரம் கிளாலிக் கடலில் படகுசேவைகள் தடைப்பட்டுள்ளதையடுத்து இந்தபயணிகள் இங்கு வரமுடியாத நிலையில் உள்ளனர்.

நத்தார் - புதுவருட நாட்கள் நெருங்கிவருவதனல் யாழ் வருவதற்கு ஏராளமான பயணிகள் வவுனியாவில் வந்து சேருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (56)

### கொட்டகல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் திரும்பி வந்துள்ளனர்.

இவர்கள் இரு தினங்களாக கிளாலியில் தங்கியபின் பயணம் செய்தபோது கடலில் சரமாரியான வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் உடனே அங்கிருந்து திரும்பிவந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளனர். (157)

### போலி அடையாள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்,

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 300 போலி அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### தடுப்புக்காவலிலுள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலையிலும் வைக்கப்பட்டுள்ளோரின் விபரங்களே இவ்வாறு திரட்டப்பட்டுள்ளன.

மகசீன் சிறைச்சாலையில் இருக்கும் 828 பேரின் பெயர் விபரங்களும் களுத்துறை சிறையில் இருக்கும் 604பேரின் பெயர் விபரங்களும் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ் விபரங்களை மட்டு சமாதானக்குழு அலுவலகத்திலும் மனித உரிமைகள் பணியகக் குழுவிலும் பார்வையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ராவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தடுக்க பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உரிய காலத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் அதனல் பிரதமர் நரசிம்மராவுக்கும் பொறுப்பு உண்டு என்று அடல்பிகாரி வாஜ்பாய் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டினர்.

அயோத்தியில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு முன்பு பிரதமர் தலையிட்டு குடியரசு ஆட்சியை ஏற்படுத்தி பாபர் மசூதியை பாதுகாக்கப்படவேண்டும்.

பி ஜே. பி தலைமையிலான மாநில அரசுகள் கலைக்கப்பட்டதையும் ஆர். எஸ். எஸ். போன்ற அமைப்புக்கள் தடை செய்யப்பட்டதையும் வாஜ்பாய் கண்டித்துப் பேசினர். (சு)

### விமான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இரண்டு ஹெலிகொப்டர்கள் மாறிமாறி பலாலி இராணுவ முகாமிலிருந்து வெற்றிலைக் கேணி இராணுவ முகாமுக்கு அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருந்தன.

### அரசஊழியர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள், தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்களாகப் பணிபுரியும் பலருக்கு வருடாந்த இடமாற்ற உத்தரவு வடக்கு-கிழக்கு மாகாண சபையினல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

### அரசியல்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

செயலிழந்து...செயல்பட்டனர்.

காலஞ்சென்ற திரு ரஞ்சன் விஜேரத்ன பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோதும் இந்தப் பாதுகாப்புச் சபை கூட்டங்களுக்கு தலைமைவகித்து வந்தார்.

ஆனல் இன்று அப்படியில்லை அரசியல் தலைமைத்துவம் இல்லாமலேயே பாதுகாப்புச்சபை கூட்டங்கள் நடைபெறுகின்றன.

படையில் உயர்பதவிகளில் உள்ளவர்கள் போட்டிமனப்பான்மையில் தமக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். கருத்துமோதல்கள் பரவலாக இடம்பெறுகின்றன.

இதனல் இராணுவ இரகசியங்கள் வெளியே தெரிந்துவிடுகின்றன. இரகசிய தாக்குதல்கள் பற்றிய தகவல்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு முன்கூட்டியே தெரிந்து விடுகின்றன. இராணுவம் இதன்காரணமாக அதன் தாக்குதல் நடவடிக்கைகளில் வெற்றி கொள்ள முடியாமல் ஒரு தொய்வு நிலையில் நிலை கொள்ள ஆரம்பித்துவிட்டது.

### தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கருத்தை அடைவதில் தோல்வியடைந்துவிட்டதாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. மங்கள முனசிங்கா நேற்று நாடாளுமன்றத்தில் அதிகாரபூர்வமாகத் தெரிவித்தார்.

மேலும் அரசுமேற்கொண்ட இந்த அமைதிப் பேச்சுவார்த்தையானது ஒரு ஏமாற்று வித்தையென இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டஅதன் ரகசியகட்டுக்கோப்பை மீறிய ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர் திரு. சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஐந்து கட்சிகளும் வழங்கும் திட்டத்திற்கு விடுதலைப் புலிகளின் பேச்சாளர் திலகர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வீ)


## மரண அறிவித்தல்

### சகோதரி அன்னமரியாள் ஆசீர்வாதம்

இலங்கை பெந்தெகொஸ்தெ சபையில் ஊழியம் செய்த சகோதரி அன்னமரியாள் ஆசீர்வாதம் 17-12-92 வியாழக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்தார். அன்னாரின் அடக்க ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை (18-12-1992 காலை 8 00 மணிக்கு சுண்டுக்குளி சபைச்சாலையில் இடம்பெற்று நல்லடக்கத்திற்காக வசந்தபுரம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன் ஆ. மகேந்திரன்

17-12-92. (சி-7077)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8